# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 148/2023

## வழக்கு சாட்சி :PW6(LW5)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மூக்கையா | தொழில் | : | கூலிவேலை |
| கிராமம் | : | ஆவராங்குடிப்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 39 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 24th day of June 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஆவாரங்குடிப்பட்டியில் குடியிருந்து வந்து கூலி வேலை பார்த்து வருகிறேன். கடந்த 04.02.2022 அன்று காலை 11.00 மணியளவில் அ.சா. 1 ன் வீட்டின் அருகே வந்து அ.சா. 1 க்கும், எதிரிகளுக்கும் நடந்த தகராறு சம்மந்தமாக விசாரணை செய்து வரைபடம் வரைந்த போது நான் சாட்சியாக உடன்இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ 4 /PW6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எ.த.கு.வி</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக என்னிடம் போலிசார் விசாரணை செய்து எந்த வாக்குமூலமும் வாங்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் இன்று தான் இந்த வழக்கிற்காக போடப்பட்டது என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எழுதப்படாத பேப்பரில் கையொபபம் செய்தேனா என்றால் எழுதியிருந்தது, என்னவென்று கேட்ட போது போலிசார் வந்ததற்காக கையொப்பம் வாங்கியதாக சொன்னார்கள்.